# தேசிய அரசில்சமசமாஜிகளும் சேரவேண்டுமாம்

## கிரியெல்ல எம். பி. விருப்பம்

கோட்டை, திங்கள்
லங்கா சமசமாஜக் கட்சி தேசிய அரசாங்கத்துடன் சேர்ந்து பிரதமர் டட்லி சேனநாயகாவின்கீழ் இயங்க வேண்டும் என்று சமசமாஜக்கட்சியின் வருடாந்த மகாநாட்டில் தீர்மானம் கொண்டுவரப் போவதாக கிரியெல்ல எம். பி. திரு.பி. பி. விஜயசுந்தர தெரிவித்திருக்கிறார். சமசமாஜக்கட்சியின் வருடாந்த மகாநாடு 1969 ஜூலை 25ம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. இதை ஒரு தீர்மானமாகவே திரு. விஜயசுந்தர சமர்ப்பித்திருக்கிறார், தீர்மானக் கமிட்டியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இத்தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படா விட்டாலும் இதனை மகாநாட்டில் கிளப்புவதற்கு அவர் உறுதி கொண்டிருக்கிறாராம். தீர்மானம் நிராகரிக்கப்பட்டால் கட்சியிலிருந்தும் விலகப் போவதாக அவர் கூறியிருக்கிறார்.

பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவின் தேசிய அரசுடன் சேர்ந்து உழைப்பதுபற்றி சமசமாஜக்கட்சியினர் சில காலமாகவே ஆலோசித்து வந்தத கவும் சமீபத்தில்தான் இந்தக் கருத்து கைவிடப்பட்டதாகவும் சமசமாஜக்கட்சிப் பிரமுகர்கள் சிலர் கூறுயிருக்கிறார்கள்.


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

**ஈழநாடு சந்தா**
தினப் பதிபபு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU
National Tamil Daily
தபால்பெட்டி எண்: 49
போன்: 389
மலர் 11
இதழ்:153
தேசிய தினசரி

**ஈழநாடு சந்தா**
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம் ஆனி 31 ரபி. ஆகி 29 செவ்வாய்க்கிழமை [15-7-69]


# யாழ்ப்பாணத்தில் தொழில் பயிற்சி நிலையம்

## மாநகரசபை அமைக்கும்

யாழ்ப்பாணம், செவ்.

**யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண மாநகரசபை ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க முடிவுசெய்துள்ளது.**

இவ்விதம் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கப் படவேண்டுமென மாநகர சபை 5-ம் வட்டார உறுப்பினர் திரு அன்ரனி பிரேரணை ஒன்று கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து இம் மாதம் 12 ம் திகதி நடைபெற்ற குழுக் கூட்டத்தில் திரு நா. மார்க்கண்டு தொழிற் பயிற்சி நிலைய குழுத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இக் குழுவுக்குநான்கு ஆலோசகர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாநகராட்சிமன்ற மின்சார என்ஜினியர், மாநகராட்சிமன்ற வேலைப் பகுதி என்ஜினியர், இளைப்பாறிய கமிஷனர். திரு. எஸ். சின்னையா, இளைப்பாறிய சிமெந்து மின்சாரவேலைப் பகுதி சுப்பிரிண்டன் திரு. வி. முருகேசு ஆகியோர் ஆலோசகர்களாக இருந்து தொழிற்பயிற்சிக் கல்லூரி அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார். இவர்கள் அடுத்தமாதம் 4-ம் திகதி இத் தொழிற் பயிற்சிகல்லூரிசம்பந்தமாக ஆராய்வதற்காகக் கூடுவதெனதீர்மானிக்கப்பட்டது.

வேலணை

## கி.ச. புதிய தலைவர்

யாழ்ப்பாணம், செவ்.
வேலணை கிராம சபையின் புதிய தலைவருக்கான தேர்தல் நேற்று வடமாகாண உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. அ. அ. யோசப் தலைமையில்நடைபெற்றது. முன்னாள் கிராமசபைத் தலைவரும் முதலாம் வட்டார அங்கத்தவருமாகிய கணபதிப்பிள்ளை சதாசிவம் இரண்டு அதிகப்படியான வாக்குகளால் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட புற்றிடம் கொண்டார் சுப்பிரமணியத்துக்கு 3 வாக்குகளும் திரு. சதாசிவத்திற்கு 5 வாக்குகளும் கிடைத்தன.

ஒன்பது வட்டாரங்களைக் கொண்ட இக்கிராம சபையில் 3 ம் வட்டார அங்கத்தவர் பொன்னையா நமசிவாயம் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலைமை வகித்தார். இத் தேர்தலின் போது உள்ளூராட்சி அலுவலக உதவி ஆய்வு உத்தியோகஸ்தர் திரு. ப. பரம்சோதியும் சமூகம் அளித்திருந்தார்.

கிராமசபையின் உபதலைவராக திரு. மருதயினார் கனகசபாபதிப்பிள்ளை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

(அல்.வேல. நிருபர்கள்)

## இளம் பெண் தற்கொலை; தந்தையும் தாயும் கைது

உடுப்பிட்டி, செவ்
மகள் கிருமிநாசினிக்குப் பலியானார். தாயும், தந்தையும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். இப்பரபரப்பான சம்பவம் கரணவாய் வடக்கு நவிண்டியில் நிகழ்ந்துள்ளது

தனது பெற்றோரின் கொடுமைகள் தாங்காது தன்னுயிரை மாய்த்துக் கொண்டதாகவும், அவரது தாயும், தந்தையும் நீண்ட நாட்களாக இறந்தவருக்கு அடிக்கடி தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருந்ததாகவும் இதனால் நீண்ட

# பணம் இருந்தாலும் கிடைப்பதில்லை

குடியேற்ற வாசிகள்

## பஸ்ஸுக்குள்

## மின்சாரசபை கையேற்கும்

கோட்டை, செவ்.
மின்சார விநியோகம் இன்று முதல் மின்சார சபையிடம் கையளிக்கப்படவிருக்கிறது. உள்ளூராட்சி மன்றங்கள் மின்சார விநியோகத்தில் கையாளும் தவறான வழிகளை நீக்கவும், பொதுமக்களுக்கு கூடிய நன்மையைச் செய்யவும் இந்தமுடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## திருட்டு

அளவெட்டி, திங்கள்
பழை-வீமன்காமம் கிராம முன்னேற்றச் சங்க ஆதரவில் இயங்கிவரும் நெசவு நிலையத்தில், திருடர்கள் நெசவுநிலையத்தில் போடப்பட்டிருந்த இரும்பு வலையை பிரித்து உள்சென்று சேலைகளையும், வேட்டிகளையும், சாரங்களையும் களவாடியுள்ளனராம்.

காங்கேசன்துறைப் பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

## ஐ. வி. சங்கம் பொறுப்பேற்றது

யாழ்ப்பாணம், செவ்.
ட்ரேட் அன்ட் ட்ரான்ஸ்போட் லிமிட்டெட்டை நேற்று யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் பொறுப்பேற்றுக்கொண்டது. அதைப் பொறுப்பேற்றுப்பேசிய தலைவர் டாக்டர் கனகரத்தினம், பல கஷ்டங்களும், தொல்லைகளும் ஏற்பட்டதால் ட்ரேட் அன்ட் ட்ரான்ஸ்போட்லிமிட்டெட் மூடவேண்டி ஏற்பட்டதாகவும், இதைத்தொடர்ந்து

'அரசாங்க ஊழியருக்கு

## ஆண்டுதோறும் சம்பள உயர்வு அளிக்கப்படவேண்டும்'

### அரசாங்க எழுது வினைஞர் சங்க காரியதரிசி அறிக்கை

கொழும்பு, திங்கள்
''தனியார் துறைக்கு ஏற்ப அரசாங்கத்துறையில் உள்ளவர்களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற சிபார்சை சம்பள நிர்ணயக் கமிஷன் ஏற்று சம்பள உயர்வைக் கொடுத்திருந்தாலும், அதிகரிக்கப்பட்ட சம்பள விகிதம் மகிழ்ச்சியளிப்ப தாயில்லை''

சம்பள நிர்ணயக். கமிஷனின் சிபார்சு பற்றி அரசாங்க எழுது வினைஞர் சங்க காரியதரிசி திரு. இ. இராமநாதன் வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- 'அரசாங்க ஊழியரின் கோரிக்கைக் கேற்ப சம்பள உயர்வு ஓரளவு கொடுக்கப்பட்டிருந்தாலும், வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் போது சம்பள உயர்வை மீண்டும் அதிகரிக்க வேண்டி ஏற்படும். எனவே அரசாங்க ஊழியருக்கு ஆண்டு தோறும் சப்பள உயர்வு அளிக்க வேண்டும்.''

''கமிஷனின் சிபார்சுகளும் உயர் மட்டத்திலுள்ள அதிகாரிகளுக்கே அதிக நன்மை பயப்பதாக உள்ளது. போக்கு வரத்து அலவன்ஸ் என்று கமிஷன் செய்துள்ள சிபார்சு கீழ்மட்டத்திலுள்ள அரசாங்க ஊழியருக்கு அதிக நன்மை பயக்காது.

'சம்பள நிர்ணயக் கமிஷனின் சிபார்சுகளை அமுல நடத்துவோம் என்று திடமாகக் கூறாமல், அமுல் நடத்த கூடிய முயற்சி எடுப்போம் என்று சிம்மாசனப் பிரசங்கத்தில் அரசாங்கம் கூறியிருப்பது வேதனையளிப்பதாக இருக்கின்றது.''

## பிரதமர் ஒய்வு பெறுவார்

கொழும்பு, திங்கள்
அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சியை வெற்றிபெறச் செய்துவிட்டு, அந்த பாராளுமன்றக் காலத்தோடு தான் அரசியலிலிருந்து ஒய்வு பெறப்போவதாக பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இன்று தெரிவித்தார். ஐ. தே. கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய பிரதமர் தொடர்ந்து கூறுகையில்அடுத்தபொதுத் தேர்தல் மிகமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென்றும் குறிப்பிட்டார்.

## 5,000 பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிடைப்பதில்லை

## குடியேற்ற வாசிகள் பெறும் அனுபவம்

யாழ்ப்பாணம், செவ். வவனிக்குள குடியேற்றத் திட்டத்திலுள்ளவர்கள் கிணறு வெட்டியதற்கான பணம் தமக்கு வழங்குமாறு கேட்டபோது சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் இதற்கு பணம்இல்லையெனத் தெரிவித்தார்களாம்.

இதுபற்றி இவர்கள் கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்திடம் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து அவர் காணி ஆணையாளரிடம் கேட்டபோது பணம்இருப்பதாகவும் வழங்கப்படுமென்றும் தெரிவித்தாராம்.

இதுசம்பந்தமாக திரு. இரத்தினம் மாவட்டஇணைப்புக் குழுக்கூட்டத்தில் அரசாங்க அதிபர் திரு. பிரான்ஸிஸ் எப். பீற்றர்ஸின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது அவர் இக்குடியேற்றவாசிகளுக்கு ஒரு வாரத்தில் இதற்கான பணம் கிடைக்கத்தாம்நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

## வடக்கில் குற்றச்செயல்கள் கட்டுப் படுத்தப்படுகின்றன

### திரு. டெடிகம மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், செவ். 'வடபகுதியில் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவு வளர்வதால் இங்கு அதிகரித்து வந்த குற்றச் செயல்கள் இப்போது கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது.'

இவ்வாறுவடக்கில் இரண்டு வாரசுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு எம். பி டெடிகம பொலிசார் மத்தியில் தெரிவித்தார்.

வடக்கிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் விஜயம் செய்த திரு. டெடிகம பொதுமக்களுடன் கலந்துரையாடி பொலிசாரிடம் பொதுமக்கள எதிர்பார்க்கும் தேவைகள் பற்றி அறிந்து கொண்டதோடு தமிழில் செய்யப்படும் புகார்களை தமிழிலேயே பதியவும் வசதிகளை செய்து கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இதுமட்டுமின்றி நல்லூர் தற்காலிக பொலிஸ் நிலையத்தை நிரந்தரமாக்கவும் முறிகண்டி, மாங்குளம், முருங்கன் ஆகிய இடங்களில் தற்காலிக பொலிஸ் நிலையங்களை அமைக்கவும் திரு டெடிகமவின் வடபகுதி விஜயம்வழிவகுக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. (கா. நி)

## கருவாட்டுக்குள் சாரங்கள்: பொலிஸார் கைப்பற்றினர்

யாழ்ப்பாணம், செவ்வாய் கருவாட்டுக்குள் ஒழித்து வைக்கப்பட்டிருந்த கள்ளக் கடத்தல் சாரங்களை ஆனையிறவு தடை முகாமில் வைத்து பொலிசார் கைப்பற்றினார்கள். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கருவாட்டுடன் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றை ஆனையிறவு தடை முகாமில் வைத்து பொலிசார் சோதனை செய்தபோதே சப் இன்ஸ்பெக்டர் திரு. அங்குலான 240 கள்ளக்கடத்தல் சாரங்களைக் கைப்பற்றினார்.

கைப்பற்றப்பட்ட லொறியும் சாரங்களும் சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (கா. நி.)

## திரு. தவராஜா இடமாற்றம்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சுப்பிரிண்டனகக் கடமையாற்றும் திரு. ஆர். சி. தவராஜா நாளை முதல் கம்பஹா பொலிஸ் நிலையத்துக்கு உதவி பொலிஸ் சுப்பிரின்டனக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (கா. நி)

மாநகராட்சிமன்ற மின்சார என்ஜினியர், மாநக

## பஸ்ஸுக்குள் குழந்தை பிறந்தது

திருகோணமலை, திங்கள் குடியேற்றத் திட்டத்தை சேர்ந்த கர்ப்பிணிப் பெண் பிரசவத்திற்காகப் பஸ்சில் ஆஸ்பத்திரிக்கு பயணம் செய்துகொண்டிருக்கையில் இ. போ. ச. பஸ்சுக்குள்ளேயே குழந்தையைப் பிரசவித்தார். பிள்ளையும் தாயும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலியானார். தாயும், தந்தையும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். இப்பரபரப்பான சோகச் சம்பவம் கரணவாய் வடக்கு நவிண்டிலில் நிகழ்ந்துள்ளது

கந்தப்பு என்பவரின் மனைவியான திருமதி. சரஸ்வதி (வயது 35) என்னும் பெண்மணியே கிருமிநாசினியினால் பரிதாப மரணத்துக்குள்ளானவர் ஆவார். இரு குழந்தைகளுக்குத் தாயான சரஸ்வதியின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டதால் இரு தினங்கள் நடைபெற்ற மரண விசாரணையின் பின்னரே பிரேதம் அடக்கம் செய்ய அனுமதிக்கப்பட்டது

காலஞ்சென்ற சரஸ்வதி தன்னுயிரை மாய்த்துக் கொண்டதாகவும், அவரது தாயும், தந்தையும் நீண்ட நாட்களாக இறந்தவருக்கு அடிக்கடி தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருந்ததாகவும், இதனால் நீண்ட நாட்களாகப் பொறுமையுடனிருந்த சரஸ்வதி இறுதியில் கிருமிநாசினியைத் தஞ்சம் அடைந்ததாகவும் விசாரணையின்போது தெரிய வந்தது.

பிரேத பரிசோதனையில் இறந்தவரின் உடலில் மர்ம காயங்கள் காணப்பட்டதைத் தொடர்ந்து மரண விசாரணை அதிகாரியின் உத்தரவின் பேரில் இறந்தவரின் தாய் சிதம்பரப்பிள்ளை பாறுபதியும், தகப்பன் சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளையும் வல்வெட்டித்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் தாயும், தந்தையும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

சரஸ்வதியின் மரணம் கொலையா, தற்கொலையா என்பதில் சந்தேகம் கொண்ட மரணவிசாரணை அதிகாரி திரு. தாமோதரம்பிள்ளை தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்து மேற்கொண்டு புலன்விசாரணை செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். அருளானந்தம் பிரேத பரிசோதனை நடத்தினர்.

இறந்தவரின் தாலிக்கொடியைக் கடந்தவருடம் இறந்தவரின் தாயார் அறுத்துத்தாக்கியதாகவும் முன்னர் பொலிஸில் புகார் செய்யப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

## அரசாங்க அதிபர் விளக்கம்


யாழ்ப்பாணம், செவ். 'அரசாங்க இலாகா அதிகாரிகள் கூடுதலாகக் கலந்துகொள்ளும் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகள் அடுத்த நாளே பத்திரிகைகளில் வந்துவிடுவதால்குறிப்பிட்ட முடிவுகளை செயற்படுத்த சிக்கல் ஏற்படுகின்றது. இதனல்தான் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டங்களுக்கோ, மாவட்ட விவசாயக்கூட்டங்களுக்கோ இப்போது பத்திரிகையாளர்களை அழைப்பதில்லை.'

நேற்று நடைபெற்றபத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் சி. பீட்டர்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்க செயலகத்திலுள்ள அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் இம்மாநாடு நடைபெற்றது.

பொதுமக்களினதும் விவசாயிகளினதும் அபிவிருத்திக்காக எடுக்கப்படும் திட்டங்களைப் பூரணமாகச் செயல்படுத்துவதற் காகவே பத்திரிகையாளர்களை இப்போது கூட்டங்களுக்கு அழைப்பதில்லை என்று தெரிவித்த திரு. பீட்டர்ஸ், எந்த கூட்டம் நடந்தாலும் கூட்ட அறிக்கை பத்திரிகைகளுக்குக் கட்டாயம் அனுப்பி வைக்கப்படும் என்றும் வாரமொரு தடவை செய்தித் தொகுப்பு ஒன்றைப் பெறலாமென்றும் சொன்னர்.

எந்த வேளையிலும் அரசாங்க செயலகத்தில் தன்னை பத்திரிகை நிருபர்கள் சந்திக்கலாம் என்றும் அதற்குத் தடை எதுவும் இல்லையென்றும் அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் இங்கு மேலும் தெரிவித்தார். (கா. நி.)



இலங்கை வங்கி டைரக்டர்கள் சபை தலைவர் திரு ஏ.சி. குணரட்ன கியூ, சி. சுன்னகத்தில் இலங்கை வங்கிக் கிளையை சென்ற 2-ம்திகதி சம்பிரதாய முறைப்படி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்த போது எடுக்கப்பட்டபடம். மத்தியில் இலங்கைவங்கி ஜெனரல் மனேஜர் திரு. சிட்னி எம். ஸ்ரீமானேயும் பக்கத்தில் சுன்னகம் கிளை மனேஜர் திரு. வி. விக்னேஸ்வரனும் காணப்படுகின்ற

படம்: 'சிட்டு'

கனகரத்தினம், பல கஷ்டங்களும், தொல்லைகளும் ஏற்பட்டதால் ட்ரேட் அன்ட் ட்ரான்ஸ்போட்லிமிட்டெட் மூடவேண்டி ஏற்பட்டதாகவும், இதைத்தொடர்ந்து நடாத்த பொதுமக்களின் ஆதரவு தேவை என்றும் கூறினர்.

2600 பங்குகளில் அரைவாசிப் பங்குகளை வியாபாரச் சங்கம் எடுத்துள்ளதாகவும், அவர் கூறினர். முதலியார் முத்துத்தம்பி பேசுகையில், ஐக்கிய வியாபாரச் சங்கம் இந்தக் கம்பெனியை பொறுப்பேற்பதால் வேலையிழக்கவிருந்த சுமார் 60 ஊழியர்கள் நன்மைபெறக் கூடியதாகவிருக்கிறது என்றர். (கா. நி)

## உள்ளூராட்சி மன்றங்களின் இடைத் தேர்தல்

யாழ்ப்பாணம், செவ். நல்லூர் கிராமசபையின் நான்காம் வட்டாரத்துக்கான இடைத் தேர்தலுக்கு அபேட்சகர் நியமனப்பத்திரங்கள் இன்று மாலை 3 மணிக்கு கிராமசபை மண்டபத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன.

வட்டுக்கோட்டைக் கிராமசபையின் 7-ம் வட்டார இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 18-ந் திகதி தாக்கல் செய்யப்படவிருக்கின்றன.

பருத்தித்துறை பட்டினசபையின் 7-ம் வட்டாரத்துக்கான இடைத் தேர்தல் இம்மாதம் 20-ந் திகதி நடைபெறவிருக்கின்றது.

சாவகச்சேரி கிராமசபையின் 6-ம் வட்டாரத்துக்கான இடைத் தேர்தல் இம்மாதம் 27-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

நீர்வேலி கிராமசபையின் தலைவராக முன்னைய தலைவரான திரு. இராமலிங்கம் அப்பாத்துரையே மீண்டும் தெரியப்பட்டார். இவருடன் போட்டியிட்ட திரு. மு. பூபாலசிங்கத்துக்கும் இவருக்கும் தலா 4 வாக்குகள் கிடைத்ததால் திரு. அப்பாத்துரை திருவுளச்சீட்டு மூலம் தெரியப்பட்டார். (கா. நி.)

என்று கமிஷன் செய்துள்ள சிபார்சு கீழ்மட்டத்தி

## 5,000 பத்திரிகையாளர் சந்திரபயணம் பார்ப்பர்

கென்னடிமுனை, ஜுலை. 15 அப்போலோ-11 சந்திரனுக்கு நாளை பயணமாவதைத் தொடர்ந்து, சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்ச்சியைக்காண சுமார் 5,000 பத்திரிகையாளர் கென்னடிமுனையில் குவிந்திருக்கின்றனராம்.

## "நாவலர் தோன்றியிராவிடில் இன்று சைவர்கள் இல்லை"

நல்லூர், திங்கள் சைவத்துக்கு அந்நியர் ஆதிக்ககாலத்தில் இடுக்கண் ஏற்பட்ட போது நாவலர் தோன்றினர். இன்று சைவத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. நாவலர் இன்று உயிரோடு இருந்திருப்பின் சைவத்தைக்காக்கபோராடியிருப்பார், என்று உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஞாயிற்றுக்கிழமை இரவு சண்டிலிப்பாய்இரட்டையப்புலம் வைரவ கோவில் முன்றலில் நடைபெற்ற சைவ மகாநாட்டில்பேசுகையில் கூறினர்.

சண்டிலிப்பாய் ஆலங்குளாய் இந்து வாலிபர் சங்கத்தின் சைவ மகாநாடு மானிப்பாய் கிராம சபைத் தலைவர் திரு. சு. மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றது. உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம் பிள்ளை கொடியை ஏற்றி வைத்து விழாவைத் தொடக்கிவைத்தார்.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் மேலும் பேசியதாவது:-

சைவ சமயத்துக்குக் காலத்துக்குக் காலம் ஆபத்து ஏற்பட்ட போதெல்லாம் பெரியார்கள் பலர் தோன்றி சைவத்தைப்பாதுகாத்தனர். உத்தியோகம் முதலான சலுகைகள் பெறவும், உரிமைகள் பெறவும் எத்தனையோ சைவர்கள் கடந்த நூற்றண்டில் கிறிஸ்தவர்களாக மதம் மாறினர்கள் இன்று அதே சலுகைகள், உரிமைகள் பெற எத்தனையோ சைவர்கள் பௌத்தமதத்தை நாடுகிறுகள். இத்தகைய ஒருநிலை ஏற்பட சைவர்கள் தாம் இன்று காரணமாக இருக்கிறர்கள். நாவலர் அன்று தோன்றியிராதுவிடின் இன்று நாம் சைவர்கள் என்று சொல்லிகொள்ளக் கூடிய நிலையில் நம்மில் யாரும் இருக்க மாட்டார்கள்.

தமிழர்களுக்கு விழா எடுப்பது என்பது ஓர் கைவந்த கலை, அதனை மட்டும் மரபு தவருமல் செய்யும் தமிழன் தனக்குரிய கடமைகளைச் செய்ய முன்வருவது இல்லை, இந்த நிலைமாற வேண்டும்.

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசபிள்ளை பேசியதாவது:

நாவலருக்குச்சிலை நிறுவிவிழா எடுத்த பிறகு சைவமக்கள் மத்தியில் புதிய உணர்ச்சி பிறந்துள்ள. நாம் சைவ சமயிகளாக வாழ்கின்றுமேயன்றி சைவ வாழ்க்கை வாழவில்லை. சைவ வாழ்க்கை முறைகள் என்பது நம்மிற்பலருக்கும் தெரியாது.

சைவத்தை எதிர்காலத்தில் இந்த நாட்டில் நிலைபெறச் செய்ய வேண்டுமானல் ஒவ்வொரு தாய்மாரும் சைவ அபிமானம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். தமது பிள்ளைகளுக்குச் சமய உணர்வு ஊட்டி அவர்களைச் சமய வாழ்க்கையில் ஈடுபடுத்த அவர்கள் சிறு வயதிலிருந்தே ஊக்கமளித்து வர வேண்டும்.

நாவலர் விழா ஓர் உண்மையை நமக்கு எல்லாம் எடுத்துக் காட்டுவதாக இருந்தது. சைவத்தின் தலைமகன நவலர் கொழும்பு நகரவீதிகளில் சிலை வடிவில் பவனி வந்த போது பௌத்தர்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் அஞ்சலி செய்வதனைக் கண்டவர்கள் சைவத்தின் மகிமையை பெருமையை பிறமதத்தவர்கள் எவ்வளது தூரம் போற்றுகிறர்கள் என்பதனை அறியக் கூடியதாக இருந்தது.

இந்து வாலிபர் சங்கம் நடத்திய பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு திரு. வி. தர்மலிங்கம் எம். பி. பரிசுகளை வழங்கினர். மற்றும் பலர் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WANTED

Administrative Assistant Moolai Co-operative Hospital, Chulipuram. Appointment on three year Contract Annual renewal of Contract Subject to medical examination and efficiency. Salary: according to Qualification & Experience. (Preference for Accounting Experience) (Minimum: Rs. 450/-all inclusive). Closing Date: July 27, 1969. Interview Probable Date: 31 st July, at 10.00 A. M. President Co operative Hospital Society Ltd. Moolai. 1247

இன்று மட்டும்
வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
எம். ஜி.ஆர். -ஜெயலலிதா
நடித்த
சந்திரோதயம்

MANOHARA
JAFFNA
Daily 6-30, & 10-00 p m.
Joy Abeyawickrama
Vijitha Mallika
in
SANGAVENASEVANELLA
(Sinhalese)

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
THE BEST OF
LAUREL & HARDY
(Color)


# சென் பற்றிக்ஸ் விளையாட்டு போட்டியில் 'மத்தியூஸ்' முதலிடம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கல்லூரி மைதானத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ் விளையாட்டுப் போட்டிக்கு, வடபகுதி கள்ளக் கடத்தல் தடுப்பு, கள்ளக்குடியேற்றத் தடுப்பு பொலிஸ் அதிகாரி திரு. எஸ். சில்வேஸ்டர் ஜோசப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இப் போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு திருமதி சில்வேஸ்டர் ஜோசப் பரிசில்களை வழங்கினர்.

இவ் விளையாட்டுப் போட்டியில் "மத்தியூஸ்" இல்லம் 171 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும், "டண்" இல்லம் 166 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும், "போஞ்சின்" இல்லம் 137 புள்ளிகளைப் பெற்று மூன்றுவது இடத்தையும், "ஏபிரகாம்" இல்லம் 96 புள்ளிகளைப் பெற்று நாலாவது இடத்தையும் அடைந்தன.

விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற 4x100 அஞ்சல் ஓட்டத்தில் 'சென்றல் வை. எம். ஜி' முதலாவதாகவும், 'சிங்கிங் பிஸ்' வி. க. இரண்டாவதாகவும், 'கிறீன்பீல்ட்' வி. க. மூன்றுவதாகவும் வந்தன.

இப் போட்டியின் மற்றைய விபரங்கள் பின்வருமாறு:

## 13 வயது

100 மீற்றர் ஓட்டம்: திசவீரசிங்கம், எவறஸ்ட், வசந்தகுமார். 200 மீற்றர் ஓட்டம்: திசவீரசிங்கம், வசந்தகுமார். உயரம்பாய்தல்: திசவீரசிங்கம், ரட்ணராசா, தியாகராசா நீளம்பாய்தல்: வசந்தகுமார், எவறஸ்ட், பிஸ்ரன். 4x100 அஞ்சல் ஓட்டம்: 'டண்' இல்லம், 'மத்தியூஸ்' இல்லம், 'போஞ்சின்' இல்லம். சிறந்த வீரர்: டபிள்யூ டி. திசவீரசிங்கம்.

## 14 வயது

100 மீட்டர் ஓட்டம்: சூசைப்பிள்ளை, தங்கராசா, மரிசால்பிள்ளை. 200 மீட்டர் ஓட்டம்: லோறன்ஸ் பிள்ளை, ராசநாயகம், மரிசால்பிள்ளை. உயரம் பாய்தல்: கிருபாகரன், நில்லோவர், கிறிஸ்ரின். குண்டு எறிதல்: சூசைப்பிள்ளை, எதிர்மனசிங்கி, ஜெயநாயகம் 4x100 அஞ்சல் ஓட்டம்: 'டண்' இல்லம், 'ஏபிரகாம்' இல்லம், 'போஞ்சின்' இல்லம். சிறந்த வீரர்கள்: சி. லோறன்ஸ்பிள்ளை, எல். சூசைப்பிள்ளை.

நீளம் பாய்தல்: லோறன்ஸ்பிள்ளை, ராசா, நில்லோவர்.

## 5 வயது

100 மீட்டர் ஓட்டம்: சேவியர், யோசப். விசஜேந்திரன். 200 மீட்டர் ஓட்டம்: கிறிஸ்தோபர், பிலிப், அருளேஸ்வரன். 300 மீட்டர்: சேவியர், ஜோர்ஜ், அருளேஸ்வரன். 80 மீட்டர் தடை தாண்டிப் பாய்தல்: சேவியர், அருளேஸ்வரன், எட்வேட். உயரம் பாய்தல்: அருளேஸ்வரன், கருணாகரன், ஞானசேகரம். நீளம் பாய்தல்: சேவியர், யோசேப், பவேந்திரன். குண்டு எறிதல்: கிறிஸ்தோபர், யோசேப், அல்வின். பரிதிவட்டம் வீசுதல்: யோசேப், கிறிஸ்தோபர், இரத்தினராசா. 4x100 அஞ்சல் ஓட்டம்: 'ஏபிரகாம்' இல்லம், 'போஞ்சின்' இல்லம், 'டண்' இல்லம்.

## 16 வயது

100 மீட்டர் ஓட்டம்- பத்மராசா, டமியன், ராஜா. 200 மீட்டர் ஓட்டம்- பத்மராஜா, எட்வர்ட், டமியன். 400 மீட்டர் ஓட்டம்- எட்வர்ட், ராஜா, யோன். 100 மீட்டர் தடை தாண்டிப் பாய்தல்- எட்வர்ட், மதுரநாயகம், ரூபேந்திரன். உயரம் பாய்தல். சல்ஓட்டம்- 'மத்தியூஸ்' இல்லம், ஏபிரகாம்இல்லம், 'டண்' இல்லம். சிறந்த வீரர் யே. பத்மராஜா.

## 17 வயது

100 மீற்றர் ஓட்டம்- சூரியகுமார், அன்ரனி, குறூஸ். 200 மீட்டர் ஓட்டம்- அன்ரனி, குறூஸ், அருளானந்தம். 400 மீட்டர் ஓட்டம்- இமானுவல், எதிர்மன்னசிங்க, அருளப்பு. 100 மீட்டர் தடை தாண்டிப் பாய்தல்- சந்திரசேகரா, எதிர்மன்னசிங்க, றெஜினல்ட். உயரம் பாய்தல்- சூரியகுமார், சந்திரசேகர, எட்வர்ட். நீளம் பாய்தல்- சூரியகுமார், அன்ரனி, குறூஸ் குண்டுஎறிதல்- பஸ்ரியன்பிள்ளை, அன்ரன், றெஜினல்ட். பரிதிவட்டம் வீசுதல்- பஸ்ரியன்பிள்ளை, சந்திரசேகர், மகேந்திரன். ஈட்டி எறிதல்- எதிர்மன்னசிங்க, அன்ரன். அருளானந்தம். 4X100 அஞ்சல் ஓட்டம்- 'டண்' இல்லம், ஏபிரகாம் இல்லம், மத்தியூஸ் இல்லம். சிறந்த வீரர்- சூரியகுமார்.

## 19 வயது

100 மீட்டர் ஓட்டப்- பூலோகநாதன், இமானுவல், அன்ரன் கிளஸ்ரர் 200 மீட்டர் ஓட்டம்- பூலோகநாதன், இமானுவல், ஜோன். 400 மீட்டர் ஓட்டம்- அன்ரன், மய. அன்ரன், செல்வதாஸ். 110 மீட்டர் தடை தாண்டிப் பாய்தல்- கனகநாயகம், பூலோகநாதன், யோகேந்திரன். 1500 மீட்டர் ஓட்டம்- அல்பேட், தேவதாசன், அன்ரன். 800 மீட்டர் ஓட்டம்- அன்ரன், யே. அன்ரன், அல்பேட். உயரம் பாய்தல்- யோகேந்திரா, கனகநாயகம், அலோசியஸ். நீளம் பாய்தல்- பூலோகநாதன், செல்வதாஸ், அலோசியஸ். குண்டு எறிதல்- கனகநாயகம், அன்ரன், தர்மசீலன் பரிதிவட்டம் வீசுதல்- பிரான்சிஸ், யோகேந்திரா, சேவியர். ஈட்டி எறிதல்: கனகநாயகம் தேவதாசன், தர்மசீலன். தடிஊன்றிப்பாய்தல்: அன்ரன், ஞானசீலன் கெந்தி அடிவைத்துப்பாய்தல்: இமனுவல், செல்வதாஸ், யோகேந்திரா. 4X450 அஞ்சல் ஓட்டம்: மத்தியூஸ் இல்லம், டன் இல்லம், போஞ்சின் இல்லம். 4X440 மீட்டர் அஞ்சல் ஓட்டம் மத்தியூஸ் இல்லம், போஞ்சின் இல்லம், டன் இல்லம். சிறந்த வீரர்கள்: எம். ஏ. கனகநாயகம் எஸ். பூலோகநாதன் ... தன்; ... விஜயரட்ணம் (தே. நி


வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை10-30
எம். ஜி ஆர். — ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

4வது வாரம்!
கெப்பிட்டல் பிளாஸா வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)
ஆகிய திரைகளில்
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி
★ சிவாஜிகணேசன்
★ கே. ஆர். விஜயா
முத்துராமன்




# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## வெவ்வாய் 15—7—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 வீணைஇசை, 7-35 பேச்சு, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இடைவேளை இசை, 10-00 நேயர்கேட்டவை, 10 30செய்திச்சுருக்கம்.

# சுந்தரர் மீதான வழக்கு தள்ளுபடி

அளவெட்டி, திங்கள்

மாவை கந்தன் ஆலயத் தாக்குதல் வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் சென்றமுறை உற்சவத்தின்போது உற்சவ கால நிர்வாகி திரு. சி சுந்தரலிங்கம், கே. சின்னத்தம்பி, கே. சிவசுந்தரம் என்பவர்கள்மீது ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த செல்வராசா, அப்பையா என்பவர்களைத் தாக்கியதாக குற்றம்சாட்டி காங்கேசன்துறை பொலிசாரால் இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் மல்லாகம் நீதிபதி திரு. ஆனந்தகுமாரசுவாமி முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி பொலிசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது சரியில்லை என்ற காரணம் காட்டி வழக்கை தள்ளுபடி செய்தார்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் சி. சுந்தரலிங்கம் ஆஜராகி இருந்தார்.

# டாக்ஸிமோதி சிறுவன் மரணம்

திருகோணமலை, திங்கள்

இக்னேஸ்வரன் என்ற 9 வயதுடைய மாணவன் ஒருவன் நேற்றுக்காலை திருக்கோணமலையில் உள்துறைமுக வீதியில் டாக்ஸி ஒன்றினால்மோதப்பட்டு மரணம் அடைந்தார்.

பிரஸ்தாப விபத்து நிகழ்ந்தவுடன் சிறுவன் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஒரு சில நிமிடங்களில் சிறுவன்மரணமானான். டாக்ஸிச் சாரதி கே. அந்தோனிப்பிள்ளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். திருகோணமலை பொலிசார் புலன்விசாரணை செய்கின்றனர்.

# நாவற்குழி வி. க. வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

நாவற்குழி விளையாட்டுக் கழகத்துக்கும், சாவகச்சேரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில், சாவகச்சேரி பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் நாவற்குழி விளையாட்டுக் கழகம் 2—1 ஆட்டங்களால்வெற்றி பெற்றது நாவற்குழி கோஷ்டியின் காப்டன் சடாச்சரத்தின் மின்னலடிகள் ரசிகர்களின் பாட்டைப் பெற்றது. (தே. நி)

சாத்தூர் இடைத்தேர்தல்

# கூட டணி வெற்றி

சாத்தூர், ஜூலை.14

ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாத்தூர் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் சட்டமன்றத்தில் கூட்டணி வேட்பாளர் திரு சீனநாயக்க வெற்றி பெற்றுள்ளார்.


10ல் 7 நபர்கள் கோறு தேநீர் அருந்துபவர்கள்.
மகிழ்ச்சி ததும்பும் 7 கோறு தேநீர் அருந்துவோரை
கண்டுபிடியுங்கள்.
ரூபா 17,000/= ரொக்கப்பரிசாக பெறுங்கள்.
புறூக் பொன்ட் கோறு தேயிலை போட்டியில் 200க்கும்
அதிகமான பரிசுகள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துராமன்

கீதாஞ்சலி

நடித்த



# நெஞ்சிருக்கும் வரை

இங்ஸ்லி விஜயா ஶ்ரீ கிருஷ்ணு
(கொழும்பு )(மட்டுநகர்) (திருமலே)

மற்றும் சினிமாஸ் திரைகளில் காண்பிக்கப்படுகிறது

★ ரவிச்சந்திரன்

★ கே. ஆர். விஜயா

★ நாகேஷ் ★ சோ ★ குமாரி சச்சு

இன்னும் பலர் நடித்த

முக்தா பிலிம்ஸ் அளிக்கும்

# நினைவில் நின்றவள்

டமியன். 400 மீட்டர் ஓட்டம்- எட்வர்ட், ராஜா, யோன். 100 மீட்டர் தடை தாண்டிப் பாய்தல்- எட்வர்ட், மதுரநாயகம், ரூபேந்திரன். உயரம் பாய்தல். றேமண்ட், ரூபேந்திரன். நீளம்பாய்தல்- டமியன், எட்வர்ட், புஷ்பநாதன். குண்டு எறிதல்- பத்மராஜா, அல்போன்ஸ், அலோசியஸ். பரிதிவட்டம் வீசுதல்- பத்மராஜா, யேசுராஜா, ராஜா. ஈட்டி எறிதல்- ஜோன், அல்போன்ஸ், யேசுராஜா. 4X100 அஞ்சல் இல்லம், டன் இல்லம். சிறந்த வீரர்கள்: எம். ஏ, கனகநாயகம் எஸ். பூலோகநாதன் 5 மைல் மரதன்; அகஸ்ரின், ஜெகநாதன் விஜயரட்ணம் (தே. நி

அளவெட்டி, திங்கள்

மல்லாகம்கிராமசபையின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. வி. பொன்னம்பலம் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் சமாதான நீதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]

ஜெய்சங்கர் விஜயலக்ஷ்மி நடித்த

# அன்பு வழி

ராஜா யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்


சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ்
பேபி ராணி, பத்மினி, சோ, தங்கவேலு

நடித்த

விஜயா: சுரேஷ் கம்பைன்ஸ்

# குழந்தைக்காக

கதை-வசனம் · துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்



இப்பொழுது நடைபெறுகிறது

யாழ். வின்ஸர்

வெண்திரையில்

தினசரி 4 காட்சிகள்

★ ஜெமினிகணேசன்

★ சரோஜாதேவி

நாகேஷ், வாணிஸ்ரீ, சுந்தரராஜன்

நடித்த

1968-ம் ஆண்டின் சிறந்த படமெனப் பாராட்டுப்பெற்ற
ஓர் ஒப்பற்ற குடும்பச்சித்திரம்

கே. பாலசந்தரின்

# தாமரை நெஞ்சம்




முதற் பரிசு ரூபா 3,000/- இரண்டாவது பரிசு 1,000/-
இதை விட 25 பரிசுகள் ரூபா 200/- விகிதம் 25 பரிசுகள் ரூபா 100/- விகிதம்
50 பரிசுகள் ரூபா 50/- விகிதம் மற்றும் 108 வியாபாரிகளுக்கான பரிசுகள்
ரூபா 25/- விகிதம் கவர்ச்சியாகவும், தெளிவாகவும் எழுதி அனுப்புவோருக்கும்
அதிகக் கூடுதலான பிரவேசப்பத்திரங்களை அனுப்புவோருக்கும் விசேட
ரொக்கப் பரிசுகள்

இன்று அதிகமானோரால் விரும்பப்படும் தேயிலை கோரு தூள் தேயிலை என்பதில் சந்தேகமேயில்லை. அதன் புதுமையான நறுமணத்தை மக்கள் பெரிதும் அனுபவிக்கிறார்கள். சிக்கனமானது, ஏனெனில் ஒரு பக்கட் தேயிலையில் பல கோப்பை தேநீர் தயாரிக்கலாம். நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு மேலான பெறுமதி கொண்டதனால் மேலும் மேலும் பலர் கோரு தேயிலையையே உபயோகிக்கிறார்கள்.

மேலேயிருக்கும் படத்தில் 10 நபர்கள் தேநீர் அருந்துவதைப் பார்க்கிறீர்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எண் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் 7 நபர்கள் கோரு தேநீர் அருந்துகிறார்கள். அவர்களின் மகிழ்ச்சியான திருப்தியான முகத்திலிருந்தே இதைக் கண்டு கொள்ளலாம். இப்பிரவேசப் பத்திரத்தில் கோரு தேநீர் அருந்துவோரைக் குறிப்பிடுங்கள். உதாரணமாக படத்திலுள்ள 1ம் எண் நபர் கோரு தேநீர் அருந்துபவரானால் பிரவேசப் பத்திரத்திலுள்ள முதல் வட்டத்தில் 1ம் எண்ணை இடுங்கள். இப்படி 7நபர்களின் எண்களையும் வட்டத்தில் நிரப்புங்கள். உங்கள் பெயர் விலாசம் ஆகியவற்றைத் தெளிவாக எழுதி பின் வரும் விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

கோரு தூள் தேயிலைப் போட்டி,
த. பெ. இல. 832 கொழும்பு.

நீங்கள் பரிசு பெற்றால் உங்கள் வியாபாரிக்கும் பரிசு உண்டு. ஆகையால் பிரவேசப் பத்திரத்தில் உங்கள் வியாபாரியின் பெயர் விலாசம் அல்லது கடையின் பெயர் விலாசத்தைக் குறிப்பிடத் தவறாதீர்கள்.

நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு பிரவேசப்பத்திரத்துடனும் ஒவ்வொரு கோருத்தூள் எந்த அளவு உறையானாலும் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும். விடைகளை அனுப்பும் தபால்உறையின் இடது பக்க மேல் பகுதியில் நீங்கள் அனுப்பும் பிரவேசப் பத்திரத்தின் தொகையையும் கோரு தூள் தேயிலைப்போட்டி எனவும் குறிப்பிடல் வேண்டும்.

ஒரே உறையில் யார் அதிகக் கூடுதலான பிரவேசப் பத்திரங்களை அனுப்புகிறார்களோ அவர்களுக்கே மேலதிக பரிசுகளாக ரூபா 300/- ரூபா 200/- ரூபா 100/- பரிசளிக்கப்படும்.

இப்போட்டியில் புறூக் பொண்ட் (இலங்கை) லிமிட், ஈ. பி. கிறீசி அன் கம்பனி லிமிட், ஷெனித் அட்வடைசிங் ஆகிய ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் பங்கு பற்ற முடியாது.

இப் போட்டி பற்றி எவ்வித கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

மத்தியஸ்தர்களின் முடிவே இறுதியானது.

முடிவுத் திகதி 1969ம் ஆண்டு அக்டோபர் 7ம் திகதி. பரிசு பெறுவோரின் பெயர்கள் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்

முந்துங்கள்! இன்றே பங்கு பற்றுங்கள்!




பிரவேசப் பத்திரம்

○ ○ ○ ○ ○ ○ ○

உங்கள் பெயர்:- ..................................

விலாசம்:- ..................................

..................................

உங்கள் வியாபாரியின் பெயர்:- ..................................

விலாசம்:- ..................................

..................................

தெளிவாக எழுதவும்

ZENITH



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க சீனர்கள் விருப்பம்

## 'டாஸ்' தகவல்

மாஸ்கோ, ஜுலை 14
எல்லைப் பிரச்னைகள் பற்றிய பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கு சீனு விருப்பம் தெரிவித்திருப்பதாக 'டாஸ்' அறிவித்திருக்கிறது.

கடந்த மாதம் சோவியத் கபரொஸ்க் நகரில் ஆரம்பமான இந்தப் பேச்சுவார்த்தைகள் நேற்றுத் திடீரென சீன அதிகாரிகள் வெளிநடப்புச் செய்ததால் முறிவுற்றன. பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தலாம் என்று ரஷ்யர்கள் கேட்டுக்கொண்டபோதிலும் சீனர்கள் புறக்கணித்துவிட்டு வெளியேறினுர்கள். இன்று மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்று சீனர் தரப்பில் தெரிவிககப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறின.

### சோவியத் ஒத்திகை

அண்மையில் சீனர்கள் சோவியத் மாலுமிகள்மீது தாக்குதல் நடத்திய ஒமூர் நதியில் ரஷ்யக்கப்பல்களும் ராணுவமும் ஒத்திகைகள் நடத்திவருகின்றன.

# ரஷ்யாவின் யோசனைக்கு சூ-என்-லாய் கண்டனம்

ஹாங்காங், ஜுலை 14
ஆசிய நாடுகளின் பாதுகாப்புக்குக் கூட்டு ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்படவேண்டும் என்று சோவியத் யூனியன் தெரிவித்திருப்பதைச் சீனு கடுமையாகத் தாக்கியிருக்கின்றது.

சீனுவுக்கு எதிரான ராணுவக் கூட்டை உருவாக்குவதே ரஷ்யாவின் இந்த யோசனையின் நோக்கம் என்று சீனப் பிரதம மந்திரி திரு. சூ-என்-லாய் குற்றஞ்சாட்டியிருக்கிறுர். சீனுவுக்கு விஜயஞ்செய்துள்ள பாகிஸ்தான் விமானத் தளபதி எயர் மார்ஷல் நூர்கானைக் கௌரவிப்பதற்காக நடைபெற்ற விருந்தின்போது சூ-என்-லாய் பேசினுர்.

### இந்திய அதிகாரி வெளிநடப்பு

காஷ்மீர் விவகாரம் பற்றியும் திரு. சூ-என்-லாய் குறிப்பிட்டார். காஷ்மீர் மக்களின் சுயநிர்ணயப் போராட்டங்களுக்குச் சீனுவின் ஆதரவை அவ தெரிவித்தார். காஷ்மீர் பற்றிச் சூ-என்-லாய் குறிப்பிட்டதைத் தொடர்ந்து பீகிங்கிலுள்ள இந்தியத் தூதரகப் பொறுப்பதிகாரி விருந்து வைபவத்திலிருந்து வெளிநடப்புச் செய்தார்.

ரஷ்யாவின் நோக்கம் பற்றி திரு. சூ-என்-லாய் தொடர்ந்து குறிப்பிடுகையில், மேற்கு வல்லரசுகளின் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து ஆசிய நாடுகளைத் தனது திரிபுவாதப் பிடிக்குள் இழுத்துக்கொள்ள ரஷ்யா முயலுகிறது என்ருர்.

எயர் மார்ஷல் நூர்கான் பேசும்போது சோவியத் யோசனை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. சீனு அளித்துவரும் ஒத்துழைப்புக்காக அவர் நன்றி தெரிவித்தார்.

திருப்பரங்குன்றம் பாறையிலிருந்து

# தற்கொலை செய்ய எத்தனித்த இளம்பெண்

மதுரை, ஜுலை 14
மதுரை அரசினர் ஆஸ்பத்திரியில் நர்ஸ் பயிற்சிபெறும் ஓர் இளம்பெண் (22 வயது) கடந்த 12ம் திகதி அதிகாலை திருப்பரங்குன்றம் மலையில் பாறை இடைவெளியிலிருந்து பத்திரமாக மீட்கப்பட்டார். 600 அடி உயரமுள்ள மலையில் ஒரு பாறை உச்சியிலிருந்து மனேன்மணி (நர்ஸின் பெயர்) பரீட்சையில் தவறியதால் வெறுப்படைந்து குதித்ததாகச் சொல்லப்படுகிறது. இடது கையில் லேசாக எலும்பு முறிவும், சிராய்ப்புகளும் மட்டும் அவருக்கு ஏற்பட்டன. அவர் உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஆயிரக்கணக்கான மக்கள் 16 மணி நேரத்திற்குமதிகமாக கவலையுடன் நர்ஸ் கதி பற்றி நினைத்தவண்ணமாக இருந்தனர். அவர்களுக்கு நர்ஸ் மீட்கப்பட்டவுடன் பெரும் நிம்மதி ஏற்பட்டது. ஏணி ஒன்றின்மூலம் நர்ஸ் மீட்கப்பட்டார்.

திருப்பரங்குன்றத்தின் மலையின் தென்புறமாக மாட்டுச்சந்தைக்காக கிராம மக்கள் அன்று முன்தினம் மாலை கூடினர். ஓர் இளம்பெண் வெள்ளைத் துணியைக்காட்டிக் கூக்குரலிட்டதை அவர்கள் கண்டனர். அய்யாவு என்ற ஊழியர்மூலம் தகவலைக் கேட்டதும் கோவில் சுப்பிரண்டென்ட் திரு. சண்முகசுந்தரம் மதுரை தீயணைக்கும் படைக்கும், பொலிஸாருக்கும் விவரத்தைத் தெரிவித்தார்.

ஸ்டேஷன் அதிகாரி திரு. சொக்கன் தலைமையில் தீயணைக்கும் படை கோஷ்டி ஒன்று ஸ்தலத்திற்கு விரைந்தது. ஆனுல் இருட்டிவிட்டதால், முயற்சியைக் கைவிட வேண்டியதாயிற்று. ஒரே இருட்டாக இருந்ததால் பாறை இடைவெளியை மேலிருந்தோ அன்றி கீழேயிருந்தோ அணுக முடியவில்லை. எனினும் மீட்சி கோஷ்டியினர் வாழைப் பழங்களையும், தீப்பெட்டி ஒன்றையும்; காகிதம், பேனுவையும் ஒரு வாளியில் வைத்து 80 அடி நீளக்கயிற்றின்மூலம் கீழே இறக்கினர். மனேன்மணி வாழைப்பழங்களையும், தீப்பெட்டியையும் எடுத்துக் கொண்டார். வெறும் காகிதத்தை மேலே அனுப்பினுர்.

பாறை முட்டை வடிவமாக இருந்ததால் மேலேயிருந்து அந்தப் பெண்ணைப் பார்க்க முடியவில்லை. எனவே உள்ளூர் மக்கள் ரஸ்தாவிலிருந்து (600 அடி கீழே) 'அம்மா' என்று கத்தினர். நர்ஸ் மெல்லிய குரலில் 'அய்யா' எனப் பதிலுக்குக் கத்தினுர். வெள்ளி இரவு பூராவும் இதே நிலையில் தொடர்பு நீடித்தது.

உதவி தீயணைக்கும்படை அதிகாரி திரு. சுப்ரமணியம் ஸ்டேஷன் அதிகாரி திரு. சொக்கன் இருவரது தலைமையில் 12 பேர் கொண்ட

# பாரத ஜனுதிபதி தேர்தல் ஆகஸ்ட் 16ம் திகதி நடக்கும்

## சஞ்சீவிரெட்டி-கிரி இருவரும் போட்டி

புதுடில்லி. ஜுலை, 14
இந்திய ஜனுதிபதி தேர்தலுக்கான திகதி விபரத்தை இந்திய தேர்தல் கமிஷன் அறிவித்திருக்கின்றது.

ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி தேர்தல் இடம்பெறும் இம்மாதம் 26ம் திகதி முதல் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும். வேட்பு மனுத் தாக்கல் செய்வது 26ம் திகதி முடிவடையும். வேட்புமனுக்களை வாபஸ் பெற்றுக் கொள்ளும் கடைசி நாள் 29ம் திகதி புது டில்லியில் ஆட்சி மன்றக் கட்டிடத்திலும் ராஜ்யங்கள் தோறுமுள்ள முக்கிய இடங்களிலும் வாக்களிப்பு நிலையங்கள் இருக்கும்.

### அரசியல் தலைவர்கள் அபிப்பிராயம்

இந்திய ஜனுதிபதி தேர்த...

# ரஷ்ய முயற்சிக்கு அமெரிக்கர் பாராட்டு


கென்னடிமுனை, ஜுலை 14
அமெரிக்க விண்வெளி வீரர்கள் சந்திரனை நோக்கிச் செல்வதற்கு இன்னும் மூன்று தினங்களே பாக்கியுள்ள வேளையில், சோவியத் யூனியன் ஆளில்லாக் கிரகம் ஒன்றைச் சந்திரனுக்கு அனுப்பியிருப்பது குறித்து ரஷ்யருக்கு அமெரிக்க விஞ்ஞானிகள் நல்வாழ்த்துக்கள் கூறியுள்ளனர்.

சந்திரனைப் பற்றியும் சந்திர மண்டலம் பற்றியும் ஆராய்வதற்காகவே இந்தக் கிரகம் அனுப்பப்பட்டிருப்பதாக மாஸ்கோவில் கூறப்படுகின்றது. ஆனுல் அதன் உண்மை நோக்கம் தெரிவிக்கப்படவில்லை. சந்திரனிலிருந்து மண் மாதிரிகளை அமெரிக்கர்களுக்கு முன்னதாகவே பூமிக்குக் கொண்டு வருவதற்காகவே ரஷ்யா இந்த ஆளில்லாக் கிரகத்தை அனுப்பியிருப்பதாக பொதுவாகக் கருதப்படுகின்றது. ரஷ்யாவின் இந்த நடவடிக்கை அமெரிக்காவின் சந்திரப் பயணத் திட்டத்தை எந்த வகையிலும் பாதிக்குமா என்ற கவலை தெரிவிக்கப்பட்டபோதிலும் அப்படியான அபாயம் ஒன்றுமில்லையென்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## வழியனுப்பு விழா

வல்வெட்டித்துறை, திங்
தொண்டமானுறு செல்வச் சந்நிதி கோவிலில் கதிர்காம உற்சவத்தை முன்னிட்டு சுவாமி வழியனுப்பி வைக்கும் விழா நேற்று மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

'லூனுர்-15 என்று இந்த ரஷ்யக் கலத்துக்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. ரஷ்யாவின் 'லூனுர்' ரொக்கட்டுகள் பொதுவாகவே சிறிய அளவிலானவை என்றும், சந்திரனுக்குப் போய்த் திரும்புமளவுக்கு அதில் எரிபொருள் இருக்காதென்றும் கென்னடிமுனையிலிருந்து சில நிபுணர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

பின்வரும் பொருள்கள் நிதானவிலைக்கு விற்பனை செய்வதற்கு இருக்கின்றன.

தண்ணீர்ப்பம்ப் கை வண்டிகள், நிப்பிள்கள், கப்ளிங்கள்,
பொருள்கள் சுமக்கும் ஒருசில்லு வண்டி, கைவண்டி, பிளாஸ்டிக் இரும்புக் கதிரைகள், கோப்பைகள் காய்கறிகள் புத்தகங்கள் வைக்கக்கூடிய பலரக ருக்கைகள், மடிக்கக்கூடிய ஸ்டூல்கள், கதிரைகள், வீட் ப் பாவிப்புக்குத் தேவையான பல பொருள்களும் விற்பனைக்குண்டு.

மின்சாரம், மோட்டார் மெக்கானிசம் ஜெனரல் டெக்னீஷியன்ஸ் வகுப்புகளும் இங்கு நடத்தப்படுகின்றன.

# ஸேங்ஸ் இன்ஸ்டிடியூட் ஒவ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் சுயநிர்ணயப் போராட்டங்களுக்குச் சீனு வின் ஆதரவை அவ தெரி வித்தார். காஷ்மீர் பற்றிச்

அறிவித்திருக்கின்றது.

ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி தேர்தல் இடம்

கல் செய்வது 26ம் திகதி முடிவடையும். வேட்புமனுக் களை வாபஸ் பெற்றுக்

முள்ளமுக்கிய இடங்களிலும் வாக்களிப்பு நிலையங்கள் இருக்கும்.

### அரசியல் தலைவர்கள் அபிப்பிராயம்

இந்திய ஜனதிபதி தேர்த லில் காங்கிரஸ் கட்சி சார் பில் லோக்சபை சபாநாயகர் திரு. சஞ்சீவி ரெட்டியை போட்டிக்கு நிறுத்துவ தென்று காங்கிரஸ் கட்சி முடிவு செய்திருப்பது பற்றி யும், தற்காலிக ஜனதிபதி திரு. கிரி போட்டியிட விருப்

(4-ம்பக்கம் பார்க்க)

இரவு பூராவும் இதே நிலை யில் தொடர்பு நீடித்தது.

உதவி தீயணைக்கும்படை அதிகாரி திரு. சுப்ரமணியம் ஸ்டேஷன் அதிகாரி திரு. சொக்கன் இருவரது தலை மையில் 12 பேர் கொண்ட தீயணைக்கும்படை கோஷ்டி மீட்சி நடவடிக்கையைக் காலையில் துவக்கியது.

முதலில் இரு இட்லிகளும் தண்ணீரும், பேப்பரும், பேனவும் ஒரு பக்கெட்டில் அனுப்பப்பட்டன. நர்ஸ்

(4-ம் பக்கம் பார்க்க)


மின்சாரம், மோட்டார் மெக்கானிசம் ஜெனரல் டெக்னீஜியன்ஸ் வகுப்புகளும் இங்கு நடத்தப்படுகின்றன.

**லேங்ஸ் இன்ஸ்டிடியூட் ஒவ் டெக்னே என்ஜினியறிங்**

பாங்ஷோல் வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 248. 1191




# டேவிட் பிரவுண்

## ட்ராக்டர்கள் சிறந்தவை என்பதற்கு பிரதான 7 காரணங்கள்

உண்மையில் டேவிட் பிரவுண் ட்ராக்டர் சிறந்தது உங்கள் வேலைகளுக்குகந்தது என்பதற்குப் பல காரணங்களிருப்பினும், நாங்கள் 7 சிறப்பான விஷேச அம்சங்களை மட்டும் கூறுகிறோம். மேலும் நீங்கள் எம்முடன் தொடர்பு கொண்டாலோ அல்லது நேரில் வருகை தந்தாலோ நாங்கள் அதன் மிகச் சிறந்த பலாபலன்களை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் காத்திருக்கிறோம்.

- இன்று துரிதமாக விற்பனையாகும் ட்ராக்டர்.
- உங்கள் தேர்வுக்கு 36-46-55-72 குதிரைச் சக்தி கொண்ட 4 வித ட்ராக்டர்கள்.
- பலவிதமான இணைப்புக்கருவிகளும் கையிருப்பிலுண்டு.
- உதிரிப்பாகங்கள் உடனடியாகக் கிடைக்கின்றன.
- இயக்குவதற்கு மிக வசதியான ட்ராக்டர்.
- ரோலண்ட்ஸ் ஸ்தாபனத்தின் உத்தரவாதம் கொண்டது.
- இலங்கை முழுவதிலும் பாவனைக்குப் பின் கிடைக்கும் சேவை வசதிகளுக்கு உத்தரவாதம்.




HOUSE OF R ROWLANDS

**ரோலண்ட்ஸ் (ட்ராக்டர்ஸ்) லிமிட்டெட்**

103, டார்ட் ரோட், கொழும்பு 7.

D B






இலங்கைக்கு வந்துவிட்டது!

**ஊஷா ப்ரிமா**

**உயர் வர்க்க ரகத் தையல்மெசின் வெகு சகாய விலக்குக் கிடைக்கிறது**

★ பல்வேறு தினுசுகளுக்கும் பரந்துபட்ட தேர்வு வசதிக்கும் ஊஷா ★ நெடுங்காலம் நிலைக்கும் வகையில் உறுதியாக அமைக்கப்பட்டது ஊஷா ★ அப்பழுக்கற்ற இயக்கத்தை உறுதிப்படுத்தும் பொறியியற் சிறப்புக்கு ஊஷா ★ முதன்மையான விற்பனைக்குப் பிற்பட்ட சேவைக்கு ஊஷா ★ நிரூபணமான நம்பகத்தன்மைக்கு ஊஷா

**சிறந்ததை வாங்குங்கள்; ஊஷா எல்லாவற்றிலும் சிறந்தது**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

'இந்த உலகில் உடல் வலிமையுள்ள ஒருவராவது வேலையோ, உணவோ இல்லாமல் இருக்கும்வரையில் நாம் ஓய்வு எடுத்துக்கொள்ளவோ வயிறுநிறைய உணவு அருந்தவோ வெட்கப்பட வேண்டும்.' —மகாத்மாகாந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 31-ந் திகதி (15-7-69)

## 75 ஆண்டுக்கல்விப்பணி

நாவலர் பெருமானுக்குச் சிலை எடுத்துப் பெருமை கொண்டிருக்கும் இச்சமயத்தில் நாவலர் பெருமானின் சமயப் பணியினாலும் தமிழ்ப் பணியினாலும் உந்தப்பட்டு உருவாகிய ஒரு கல்லூரி இன்று தனது எழுபத்தைந்தாவது ஆண்டுவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது, நாவலர் பெருமான் நல்லூரில் சிலைவடிவில் இருக்கவில்லையென்பதையும் தமிழுக்கும் சைவத்துக்கும்மீண்டும் ஆபத்துவந்துள்ளஇச்சமயத்தில் சோர்வுற்ற மக்களைத் தட்டிஎழுப்பி காப்பாற்றமீண்டும் அவதரித்திருக்கிறார் என்ற நம்பிக்கையையும் அளிக்கிறது.

சைவத்துக்கும் தமிழ் மொழிக்கும் அந்நியரால் ஆபத்து நேர்ந்தபோது அந்த ஆபத்தை மக்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களை விழிப்படைய நாவலர் பெருமான் அன்று குடாநாடு முழுவதும் செய்த பிரசாரத்தினால் விழிப்படைந்த பெரியார்களில் ஒருவரான கந்தையா உபாத்தியாயர், சுன்னாகத்தில் ஆரம்பித்து, பல கஷ்ட நஷ்டங்களுக்கிடையிலும் வளர்த்து வந்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி இன்று தனது எழுபத்தைந்தாவது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்து யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் மட்டுமல்லாது சைவத் தமிழ் உலகமே பெருமைப் படுகிறது.

மனித குலத்தின் எதிர்காலத்திலும் நாட்டில் நல்லாட்சி நிலவ நற்பிரஜைகள் உருவாக்கப்படவேண்டிய அவசியத்தையும் உணர்ந்திருந்த நாவலர் பெருமான் போன்ற தீர்க்கதரிசிகளும் கந்தையா உபாத்தியாயர் போன்றபெருமக்களும் இன்றிருந்தால் நாட்டின் கல்விமுறை இப்போதுள்ளதுபோன்றுகுழப்பமானதாகவும் படித்துவிட்டு என்ன செய்வதென்றறியாது இளைஞர்கள் விரக்தியடையவும் ஏற்பட்டிராது. என்றாலும் வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா, தங்கவிழாக்களைக் கொண்டாடும் கல்வி நிலையங்களின் ஆரம்பத்தையும் அவற்றை ஆரம்பித்து கஷ்டப்பட்டு பலதியாகங்களையும் செய்து, கண்ணும்கருத்துமாக வளர்த்த அவர்களின் சேவையையும் இன்றுள்ளவர்களும் உணர்ந்து எதிர்காலச் சந்ததியின்நலனைக்கருத்தில் கொண்டு உழைக்கஇந்த விழாக்கள் தூண்டுகோலாக உதவவேண்டும்.

எழுபத்தைந்து ஆண்டுகளிலும் நாட்டுக்குத்தேவையான பலரை உருவாக்கியுள்ள ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மேலும் பல்லாண்டு சிறந்த கல்விப்பணி புரியவேண்டுமென நாமும் வாழ்த்துகிறோம்.

# நல்லறிஞர்பலரை உருவாக்கிய ஸ்கந்தா

## இன்று 75-வது ஆண்டு நிறைவு விழா

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் சைவமக்களிடையே மிக்க விழிப்பும் ஊக்கமும் கல்வித்துறையில் ஏற்பட்டமையால் அநேக கல்வி ஸ்தாபனங்கள் தோன்ற ஆரம்பித்தன. நாவலருடைய சொற்பொழிவுகளே இந்த மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது நாவலர் ஆரம்பித்த இப் புதிய இயக்கம் அவர் சிவபதம் அடைந்தபின்னரும் மிக்க வேகமாக நாடு எங்கணும் பரவத் தொடங்கியது. புதிது புதிதாக அநேக தமிழ் வித்தியாசாலைகளும் ஆங்கில வித்தியாசாலைகளும் சைவப் பெரியார்களால் ஸ்தாபிக்கப்படலாயின.

### பாடசாலை ஆரம்பம்

இவ்வாறெழுந்த ஆங்கில வித்தியாசாலைகளில் ஒன்றுதான் ஸ்கந்தவரோதயக் கல்லூரி. ஆரம்பத்தில் இந்த ஸ்தாபனம் ஒரு சாதாரண வித்தியாசாலையாகவே 1894-ம் வருடம் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் ஆரம்பகர்த்தாவாக இருந்தவர் திரு. சின்னத்தம்பி கந்தையா அவர்கள். இவருக்குப் பக்கபலமாக இருந்து வந்தவர் திரு. சு. சீனி உபாத்தியாயர் அவர்கள். இவ் வித்தியாசாலையில் கந்தையா உபாத்தியாயருடன் ஆசிரியராக இருந்தவர்கள் நவாலி திரு. ப. இராம

### பழைய மாணவன்

லிங்க உபாத்தியாயர்: உடுவில் திரு. ச. சபாபதிப்பிள்ளை உபாத்தியாயர், உரும்பராய் திரு. முத்து உபாத்தியாயர் என்போர்கள்.

இவ் வித்தியாசாலை நாளடைவில் விருத்தியடைந்தமையால் புதிய கட்டடங்கள் அமைப்பதும் புதிய ஆசிரியர்களை நியமிப்பதும் அவசியமாயிற்று. அத்துடன் அரசினரின் உதவி நன்கொடை பெற்றுத்தான் நடத்த முடியுமென்று ஏற்பட்டதாயிற்று. 1900-ம் வருடம் இவ் வித்தியாசாலையின் தலைமையாசிரியராக ...

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது ஆசிரியராகவிருந்த திரு. ஆ. மாணிக்கத்தை மறந்துவிட முடியாது.

1924-ம் வருட நடுப்பகுதியில் திரு. சபாபதிப்பிள்ளை தலைமையாசிரியர் பதவியினின்றும் விலக மறுபடியும் திருமதி இளையதம்பிப்பிள்ளையவர்கள் தலைமை வகித்து வித்தியாசாலையை நடத்திவந்தனர்.


### புதிய அத்தியாயம்

பின்னர் திரு. முத்துக்குமாரு எம். ஏ. அவர்கள் இவ் வித்தியாசாலையின் தலைமையாசிரியராக நியமனம் பெற்றார். இவர் காலத்தில் இவ் வித்தியாசாலை பல துறைகளிலும் முன்னேற்றமடைய ஆரம்பித்தது. மாணவர் தொகையும் பன்மடங்கு கூடிக்கொண்டுவந்தது விஞ்ஞானகூடம் புதிய முறையில் ■ருத்தியமைக்கப்பட்டது. ... கள் போசனசாலை ... பனவும் ஏற்றமுறையில் அமைக்கப்படலாயின.

இவர்காலத்தில் புதிய பல திருத்தங்களும் மாற்றங்களும் ஏற்படலாயின. புதியதோர் விளையாட்டு மைதானம் அமைப்பதில் இவர் எடுத்துக்கொண்ட முயற்சி சொல்லுந்தரத்தன்று. கல்லூரியின் விருத்தியில் மிக்க ஊக்கத்துடன் உழைத்து வந்த இவரின் சேவையை நீடித்து பயன்படுத்தஇயலாதுபோனது பெருந்துக்கமே. கடமையை ஏற்று ஒரு வருட முடிவுக்குள் இவர் அரசினரின் கீழ் வித்தியாதரிசியாக நியமனம் பெற்று விலகும்படி நேர்ந்தது.

பின்னர் இக் கல்லூரியின் தலைமையாசிரியராக நியமனம்பெற்றவர் கட்டுடை திரு. சி. சுப்பிரமணியம் (ஓறேற்றர்) அவர்கள். இவர் 1944ஆம் வருட ஆரம்பத்திலிருந்து 18 வருடங்கட்குமேல் தொடர்ந்து அதிபராடமையாற்றினார். இவர்காலத்தில் இக்கல்லூரி பல வழிகளிலும் விருத்தியும் பெருக்கமும் அடைந்துவந்ததை எவரும் மறுக்கமாட்டார். இலவசக் கல்விமுறை நடைமுறைக்கு வந்த பின்னர் மாணவர் தொகை பன்மடங்கு பெருகிச் செல்வதாயிற்று. பெருந்தொகைப் பணம் செலவுசெய்து இரு பெரிய விஸ்தீரணமான கட்டடம் அமைக்கப்பட்டது. அன்றியும் குழாய்நீர் விநியோகம், மின்சாரவசதிகள் ஏற்படுத்தப்பட்டன. விளையாட்டுத்துறையில் உதைபந்தாட்டம், கிரிக்கெட், பாட்மின்டன், டேபிள் ரெனிஸ் எனும் விளையாட்டுகளிலும் மற்றும்உடற்பயிற்சித்துறைகளிலும் மாணவ மாணவிகள் சிறந்து விளங்கினர். உயர்தரப் பரீட்சைகளில் மாணவமாணவிகள் பெரும்பேற்றைப் பெற்றனர். 1965ம் வருடம் 42 மாணவர் பல்கலைக்கழகம் சென்றனர். இவ்வாண்டு பல்கலைக்கழகத்திற்குச் சென்றவர்களில் நமது கல்லூரியைச் சேர்ந்தவர்கள்தான் வடமாநிலப்பாடசாலைகளில் கூடிய வீதத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த 75ம் ஆண்டுப் பூர்த்திவிழா முடிய இரு மாதத்துள் திரு. வி. சுப்பிரமணியம் அவர்கள் இளைப்பாறிச்செல்லப்போகின்றனர்.

இவ்வித்தியாசாலையின் தாபகரான திரு. கந்தையா உபாத்தியாயர் தமது 83வது வயதில் (1952ல்) காலஞ்சென்றார். அவருக்கு துணையாக இருந்து சலியாது உழைத்துவந்த திரு. சீனி உபாத்தியாயர் அவர்களும் அடுத்த வருடம் (1953ல்) காலஞ்சென்றனர். இவர்களுக்குப் பின் இக்கல்லூரியைத் திறம்பட நடாத்தி வந்தவரும் கல்லூரிக்காகப் பெரும் பொருள் செலவு செய்தவருமாகிய டாக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்கள் 1964ம் வருட ஆரம்பத்தில் சிவபதம் அடைந்தார். இவர்களின் நாமங்கள் வித்தியாசாலையின் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. எத்தனையோ பேர் ஒருங்கு சேர்ந்தும் செய்து முடித்தற்கரிய தொண்டினை திரு. சி. கந்தையா உபாத்தியாயர் அவர்கள் தனது திடசிந்தையால், புத்திசாதுரியத்தால் தனித்து ஆரம்பித்து நிலைநாட்டியது பெரிதும் புகழ்ந்து பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். இவரைப்போல் கல்வி விருத்திக்காக உழைத்த இன்னொருவரைக் காண்பதரிது. இக்கல்லூரி நீடூழி வாழ்ந்து மக்களுக்கு நன்மை பயப்பதாகுக-



### இன்றைய பலன்

ஆனி மீ -31ந் திகதி

15 — 7 — 69

**மேஷம்**- மன நிறைவுக்கும் இடமுண்டு. மதிப்பும் உயரும். அறிவாற்றலால் அரசபோகமும் கிடைக்கும். தொழில்புரியும் இடத்தில் திருப்தி நிலவும் சிலர் வாழ்க்கையில் இடமாற்றமும் ஏற்படலாம்

**ரிஷபம்**- சிறப்பான சம்பவங்கள் இடம்பெறும். சீருடன் வாழ்வீர். பெரிய இடத்துச் சிநேகிதம் அனுகூலங்களைக் கொண்டு வரும். வியாபாரத்துறையில் விருத்தியும்செல்வாக்கும் பெருகும்.

**மிதுனம்**- தாமத குணத்தின்மூலம் தவறுகள் நடக்கலாம். வேண்டாதவிவாதங்களால் வீண்பெயர் கேட்க நேரிடும். கலகச் செய்திக்கும் இடமுண்டு. நிதியில் நெருக்கடியும் தோன்றும்.

**கடகம்**- குடும்பத்தில் சுகக்குறைவு தென்படும்.

## 'பாதயாத்திரையும் பஜனையும் புண்ணிய காரியமாகும்'

### நயினாதீவில் திரு. ஸ்ரீகாந்தா

யாழ்ப்பாணம், செவ். "ஆலயங்களுக்குப் பாதயாத்திரை மேற் கொண்டு தெய்வீக நாமங்களைப் பாடுவதும் அதனைக் காதினால் கேட்பதும் புண்ணியமாகும். சைவநாயன் மார்கள் யாவரும் பாதயாத்திரையாக

அடியார்களையும் இதில் கலந்து கொள்ள அழைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், கொழும்பு, நயினாதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, காரைநகர், புளியங்கூடல்

### தற்கொலை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இட்லிகளையும், தண்ணீரையும் எடுத்துக் கொண்டார். ஆனால் பதில் எழுதியனுப்பவில்லை.

பதில் அனுப்புமாறு கேட்டுக் கொண்டும், உதவியை உறுதி கூறியும் கடிதமொன்றை அதிகாரிகள் அனுப்பினர். இந்தத் தடவை மனோன்மணி பதில் எழுதி அனுப்பினார்.

வெறுப்பு காரணமாக உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றதாகவும், ஆனால் முருகன் தன்னைக் காப்பாற்றிவிட்டதாகவும் நர்ஸ் தனது பதிலில் கூறியிருந்தார். அதிகாரிகள் கூறியவாறு நடந்து கொள்ளவதாகவும் அவர் உறுதி கூறினார்.

பாறை இடைவெளியில் மரஏணி ஒன்று இறக்கப்பட்டது. இரண்டுமணி நேர கடும் முயற்சிகுப் பின்னர் நர்ஸ் மீட்கப்பட்டார்.

......

### பாரத ..

(3-ம் பககத் தொடர்ச்சி)

பது குறித்தும் பலதலைவர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி ஜனாதிபதி பதவிக்கு திரு. கிரி போட்டியிட முன் வந்திருப்பதைப் பாராட்டியிருக்கிறார். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அபிப்பிராயம் எதுவும் தெரிவிக்க முன்வரவில்லை.

திரு. கிரி போட்டியிடப் போவதாக அறிவித்திருப்பது குறித்து திரு. நிஜலிங்கப்பா ஆச்சரியம் தெரிவித்தார். அவர் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்அல்லவென்பதால் அவருக்கு காங்கிரஸ் அங்கத்தவர்கள் வாக்களிக்கப்படாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இதுபற்றி கருத்து வெளியிடுகையில் ஜனாதிபதி தேர்தல் கட்சி சார்பற்ற முறையில் நடைபெற வேண்டுமென்ற கருத்தை காங்கிரஸ் கட்சியினர் தவிடுபொடியாக்கிவிட்டனர் என்று குறிப்பிட்டார்.

### தமிழ்த் தின விழா

உரும்பிராய், திங்கள் "கோப்பாய் வட்டாரத்தில் தமிழ்த் தின விழாப் போட்டிகளைத் திறம்பட நடாத்த விழாக்குழு எடுத்த

அதிகாரி திரு. வே. சண்முகநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இப்பரிசளிப்பு விழாவுக்கு பண்டிதர் செ. துரைசிங்கம் தலைமை வகித்தார்.

தமிழ்த்தின விழாப்போட்டிக்குழுவின் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் பேசுகையில் "கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், செவ்.

"ஆலயங்களுக்குப் பாதயாத்திரை மேற் கொண்டு தெய்வீக நாமங்களைப் பாடுவதும் அதனைக் காதினால் கேட்பதும் புண்ணியமாகும். சைவநாயன் மார்கள் யாவரும் பாதயாத்திரையாக ஆலயங்களுக்கு அடியாருடன் சென்று இறைபுகழ் பாடித் தொண்டு செய்தார்கள். திருஞான சம்பந்தப் பெருமான் சிறுகுழந்தையாயிருக்கும் போது தமது பிஞ்சுக் கால்கள் வருந்த அடியார் புடைசூழ பாதயாத்திரை செய்ததை இறைவன் அறிந்து அவருக்கு முத்துப் பல்லக்கு கொடுத்தருளிய அற்புதத்தைச் சைவசமயிகள் அறிவர். திவ்விய ஜீவன சங்கத்தார் நல்லூர் கந்தன் திருவிழாவை யொட்டி பாதயாத்திரை செய்ய விருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். எமது குருநாதராகிய ஸ்ரீயோகசுவாமிகள் இவ்வாறு பாத யாத்திரைகள் செய்து மக்களை நல்வழிப் படுத்தினார்கள். இந்த நயினை நாகபூஷணி அம்மன் சந்நிதி தெய்வீகம் மிக்க ஒரு சக்திபீடம். இங்கு ஆரம்பிக்கும் நற்பணிகள் சகலதும் வெற்றி பெறும்"

இவ்வாறு யாழ்ப்பாணம் தீவுப்பகுதி திவ்விய ஜீவன அன்பர்கள் கூட்டம் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய வீதியில் நடைபெற்ற போது கூட்டத்தில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய காணி, நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ம. ஸ்ரீ காந்தா கூறினார். நயினை திவ்விய ஜீவன சங்கத் தலைவர் திரு. எஸ். விசாகப்பெருமான் கூட்டத்தில் தலைமை வகித்தார்.

யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கக் காரியதரிசி திரு. சி. கனகரத்தினம் பேசுகையில், திவ்விய ஜீவன சங்கப் பணி நன்கு நடைபெற நல்லூரில் திவ்விய ஜீவன சங்க ஆச்சிரமம் நிறுவப்படுவதாகவும் சங்கப் பணிகளை விஸ்தரிக்க யாவரும் பாடுபட வேண்டும் என்றும் கூறினார்.

திருகோணமலை உதவி அரசாங்க அதிபர், கொழும்பு திவ்விய ஜீவன சங்கச் செயலாளர் ஆகியோரும் உரையாற்றினர்.

நல்லூர் கந்தன் தேர்திருவிழாவுக்கு முதல் நாள் நயினையில் இருந்து யாத்திரை ஆரம்பித்து புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான் ஊடாக நல்லூர் செல்வது எனவும், இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள சைவ அடியார்களையும் இதில் கலந்து கொள்ள அழைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், கொழும்பு, நயினாதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, காரைநகர், புளியங்கூடல் மண்டைதீவு ஆகிய இடங்களிலுள்ள திவ்விய ஜீவன சங்கங்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

— —

## கதிர்காமதின பூசை

ஊர்காவற்றுறை, திங்.

சரவணை 'தேவபுரம்' ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கதிர்காமதின பூசை ஆரம்பிக்கப்பட்டு பத்து நாட்கள் வரை நடைபெறும். தினமும் அபிஷேகம், ஆராதனை என்பன நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இம்மாதம் 27-ம் திகதி 'திருவிழா' நடைபெறும். சுவாமி வீதிவலம்வரும் காட்சியும் நடைபெறும்.

— —

பள்ளேகலை

## பாற்பண்ணைத் தொழிற்சாலை அமைச்சர் திறந்துவைத்தார்

கலகா, திங்கள்

பள்ளேகலை பாற்பண்ணை தொழிற்சாலையை உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா திறந்து வைத்தார், நாலாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விஸ்தீரணமுள்ள பள்ளேகலைத் தோட்டத்தில் அழகிய காட்சிகள் நிறைந்த தும்பரா பள்ளத்தாக்கில் கந்தே உடரட்ட குன்றில் இத்தொழிற்சாலை அமைந்துள்ளது.

இங்கு நவீனரக யந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவை உடனடியாக இயங்கும். முதலாம் வருடத்தில் 18,000 பைந்து பாலையும் இரண்டாமாண்டில் 32,000 பைந்து பாலையும் சேகரித்துத் தயார்ப்படுத்தி பாவனையாளர்களுக்கனுப்பத் திட்டமிடப்பட்டிருக்கின்றது. இதனைத் திறம்பட செய்வதற்காகப் பாற்பண்ணைகள் வைத்திருப்போர்க்கு சலுகைகளும் அத்துறையில் விஷய விளக்கமும் மாடுகள் பராமரிப்பில் உதவியும் வழங்க அரசாங்கம் முன் வந்துள்ளது.

தங்களால் வீண்பெயர் கேட்க நேரிடும். கலகச் செய்திக்கும் இடமுண்டு. நிதியில் நெருக்கடியும் தோன்றும்.

**கடகம்-** குடும்பத்தில் சுகக்குறைவு தென்படும். வைத்தியச் செலவுகளுக்காகப் பணம் செலவாகலாம். வேண்டாத ஒருவரின் தலையீடு மனதில்வேதனையைத் தரும். மனத்திடம் வேண்டும்.

**சிம்மம்-** வீட்டில் நலன் தரும் சம்பவங்கள் நடைபெறும். தொழில்துறையிலும் வெற்றிவாகை சூடுவீர். சமரச எண்ணம்தலைதூக்கும். சுற்றுடலில் பெருமதிப்பும் ஏற்படும். சிறப்பான தினம்.

**கன்னி-** மோதவரும் பகை, மோசடிகள் நடக்கும். சகோதரவழியால் சஞ்சலம் ஏற்படலாம். அதிக சிந்தனைக்கு இடங்கொடுக்காது துணிவே துணையென இருக்கவும்.

**துலாம்-** அன்பர்களின் வருகையால் வாழ்க்கையில் புதிய உற்சாகம்பிறக்கும்; சிலருக்கு ஆத்மீகத் துறையில் நாட்டம் ஏற்படும். வாகனச் சொந்தக்காரர்களுக்கு நன்று.

**விருச்சிகம்-** புத்திக்கூர்மையுடன் புதியஎண்ணங்களும் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும்கிடைக்கும். இறை நம்பிக்கையுடன் இல்லத்திலும் அமைதி தவழும்.

**தனுசு-** எடுத்த காரியம் நஷ்டத்தில் முடியலாம். சிலர் வாழ்க்கையில் கடன் படவும் நேரிடும். மனதில் பலவிதமான எண்ணங்கள் அலைமோதும். சும்மா இருப்பதே சுகம்.

**மகரம்-** உறவினர்கள் உதவிக்கு வருவர், வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும். காதலர்கள் வாழ்வில் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும். குதூகலமான தினம்.

**கும்பம்-** செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும். சதிசெய்வதற்குச் சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். பிரயாணத்தைத் தவிர்க்கவும் இறை நம்பிக்கை நன்று.

**மீனம்-** கைகொடுத்து உதவுவதற்கு தந்தைமுன் வருவார். காரிய சித்தியும் கிட்டும். நீண்டநாள் எதிரிகள் இன்று மீண்டும் நண்பர்களாவார்கள். திருப்தியான தினம்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை
க. வேலுப்பிள்ளை

துடன் அரசினரின் உதவி நன்கொடை பெற்றுத்தான் நடத்தப்படவேண்டியதாயிற்று. 1900-ம் வருடம் இவ் வித்தியாசாலையின் தலைமையாசிரியராக தெல்லிப்பளை திரு. ரி. கே. பொன்னையா நியமிக்கப்பட்டனர். இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில்பயின்று எப். ஏ. பட்டம் பெற்றிருந்ததுடன் ஆசிரியர் தராதரப் பத்திரமும் பெற்றிருந்தவராவர். தாபகரது இடைவிடா முயற்சியால் இவ் வித்தியாசாலை பலவழிகளிலும் முன்னேற்றமடைய ஆரம்பித்தது. பல ஊர்களிலிருந்து தொகையாக மாணவர்கள் வந்து சேர்ந்தனர். 1902 ம் வருடம் வித்தியாசாலையும் அரசினர் அங்கீகாரத்தைப் பெற்று உதவி நன்கொடை பெறும் வித்தியாசாலைகளின் வரிசையில் வைக்கப்பட்டது.

மேலும் இவ் வித்தியாசாலையை உயர்தரநிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கத்துடன் திரு. கந்தையா உபாத்தியாயர் அவர்கள் சிறந்த ஆசிரியர்களைத் தேடி நியமித்தனர். 1928-ம் வருடம் தொடக்கம் இவ் வித்தியாசாலையிலிருந்து மாணவர் கேம்பிரிட்ஜ் சிரேஷ்ட பாடசாலை வகுப்புப் பரீட்சைக்கு அனுப்பப்படலாம் என்று அரசினர் அனுமதி அளித்தனர். புதிய பாடங்கள் — பிரதானமாக விஞ்ஞான சாஸ்திரம் கற்பிப்பது அவசியமாயிற்று. விஞ்ஞானப் பாடமும் பாடசாலையில் கற்பிக்க ஆரம்பிக்கப்பட்டது. விஞ்ஞான கூடம் ஒன்று அமைப்பதிலும் அதற்கு வேண்டிய உபகரணங்களைத் தருவித்தலுக்கும் ஞானகூடம் புதிய முறையில் [illegible]ருத்தியமைக்கப்பட்டது. சமயலறைகள் போசனசாலைகள் என்பனவும் ஏற்றமுறையில் அமைக்கப்படலாயின. கந்தரோடை ஆங்கில வித்தியாசாலை என்ற பெயருடன் நிலைபெற்றுவந்த இவ்வித்தியாசாலை 'ஸ்கந்தவரோதயக் கல்லூரி' என்றநாமத்துடன் விளங்க ஆரம்பித்தது. இக்காலத்திற்றான் டாக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்கள் இவ்வித்தியாசாலை முகாமையாளராக கடமையைக் கையேற்று வித்தியாசாலையை நன்கு நடாத்திவந்தார். ஆறு வருடங்களுக்கு மேல் திறமையுடன் தலைமையாசிரியராகக்கடமையாற்றி வந்த திரு. முத்துக்குமாரு பதவியினின்றும்விலகி வேறு கல்லூரிக்குச் செல்லத் திரு. சிறினிவாசன் எம். ஏ. இக்கல்லூரியின் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் காலத்திலும் வித்தியாசாலை கல்வியிலும் விளையாட்டுக்களிலும் மிக்க பிரபல்யம் அடைந்துவந்தது. மாணவர் லண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சைகளில் விசேட சித்தி அடைந்துவந்தனர். இக்கல்லூரி இவர் காலத்தில்தான் 13 வகுப்புக்கு உயர்த்தப்பட்டது. தொடர்ந்து 27 வருடங்களாக இவ்வித்தியாசாலையின் உயர்ச்சிக்காகக் கடமையாற்றிவந்த திரு. எஸ். இளையதம்பி அவர்கள் 1939ஆம் வருடம் இளைப்பாறி உபகாரச் சம்பளம் பெற்றுச்சென்றனர்.

தொடர்ந்து ஐந்துவருடங்கட்கு மேல் அதிபராகக் கடமையாற்றிய பின் திரு. எஸ். ஸ்ரீனிவாசன் 1943ம் வருட ஆரம்பத்தில் பதவியினின்றும் விலகினார். அப்போது தலைமையாசிரியராக நியமனம்பெற்றவர் திரு. எஸ். சிவபாதசுந்தரம் அவாகள்.

## வாழ்க நீடு!

சங்கொடு தரள மெல்லாம்
சார்ந்துஎண் திசைக ளெங்கும்
பொங்குவெண் திரையி னூழி
பொலிந்திடச் செய்யு மீழச்
செந்தமிழ் நாடு என்னும்
திறன்மிகு யாழின் சுன்னைக்
கந்தவ ரோத யப்பேர்க்
கல்லூரி வாழ்க நீடு!

வளருவிஞ் ஞானத் தோடு
வண்டமிழ்க் கலையி னேற்றம்
உலகினுங் கிலமும் நல்ல
ஒண்சமக் கிருத மெல்லாம்
பலதிசை நின்றே வந்தோர்
பண்பொடு கூடி ஆயும்
வளமிகு கந்தா வையம்
மலரவே வாழ்க நீடு!

— மாணவர்கள் —

னர் மாணவர் தொகை பன்மடங்கு பெருகிச் செல்வதாயிற்று. பெருந்தொகைப் பணம் செலவுசெய்து இரு பெரிய விஸ்தீரணமான கட்டிடங்கள் அமைக்கப்படலாயிற்று. இக்கல்லூரியிலிருந்து இலங்கைச் சர்வகலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்குச் செல்லவும் அனுமதிக்கப்பட்டனர். அத்துடன் இக்கல்லூரி 1947ஆம் வருடம் முதற்பிரிவு கல்லூரிகளில் ஒன்றாக உயர்த்தப்பட்டது விஞ்ஞான சாஸ்திர மண்டபங்கள், வாசிகசாலை, புத்தகசாலை என்பன மிகச் சிறந்த முறையில் புதுக்கி அமைக்கப்படலாயின. மேலும் இவருடைய நிர்வாகத்தில் மாணவர் J. S. C., G. C. E., H. S. C. முதலிய பகிரங்க பரீட்சைகளில் மிகத் திறமையுடன் தொகையாகச் சித்தியடைந்துவந்தனர். இப்போது உபயோகத்திலிருக்கும் விளையாட்டு மைதானம் உபயோகத்துக்கு வந்ததும் இவர் காலத்திலேயாகும். அநேக புதுமுறை விளையாட்டுக்கள் பாட்மின்ரன், கிரிக்கெட் முதலியன நவமாக மாணவர்கள் கையாளும் வசதிகள் இவர் முயற்சியால் கிடைத்தன என்பாம். கல்லூரி மாணவர்கள் ஐந்து இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு அவைகளுக்கிடையில் பேச்சுப்போட்டிகள், வியாசப்போட்டிகள் விளையாட்டுப்போட்டிகள் நிகழச்செய்து மாணவர்களைப் பல வழியிலும் முன்னேறச்செய்தும் வந்தனர். இவ்வாறாக மிக்க ஊக்கத்துடன் திறம்படக் கல்லூரியின் விருத்திக்காகத் தொண்டு புரிந்து வந்தவராகும் திரு. சி. சுப்பிரமணியம். அவர்கள் 1962ம் வருடம் உபகாரச் சம்பளம்பெற்று இளைப்பாறுவாராயினர்.

பின்னர் 1962ம் வருடம் தொடர்ச்சியாக அதிபர் பதவியைப் பெற்றவர் திரு வி. சுப்பிரமணியம் அவர்கள். இவர் இக்கல்லூரியிலே பயின்று நீண்டகாலம் ஆசிரியராக இருந்தவராவர். இவர் காலத்திலும் இக்கல்லூரி தொடர்ந்து எல்லாத் துறைகளிலும் விருத்தியடைந்துவந்தது.

### பாடசாலை மேலும் வளர்ச்சி

இக்கல்லூரியில் சாரணர் இயக்கமும், வழிகாட்டி இயக்கமும் மேற்கொள்ளப்பட்டன. கட்டிடங்கள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன. எழுபதினாயிரம் ரூபா செலவில் 200அடி நீளமும் 39அடி அகலமுமுடைய ஒரு விடுதிச்சாலை 1963ம் வரு

## விழா

உரும்பிராய், திங்கள்

"கோப்பாய் வட்டாரத்தில் தமிழ்த் தின விழாப் போட்டிகளைத் திறம்பட நடாத்த விழாக்குழு எடுத்த பூரண நடவடிக்கைகளை பாராட்டாமல் இருக்க முடியாது. தமிழ்த்தின விழாப் போட்டிகள்தமிழ்மொழியை வளம்படுத்துவதற்குமேலும் உதவிசெய்கின்றன".

கோப்பாய்வட்டாரப்பாடசாலைகளின் தமிழ்த்தின விழாப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கோப்பாய் வட்டாரக் கல்வி[...]ளிப்பு விழாவுக்கு [illegible] செ. துரைசிங்கம் தலைமை வகித்தார்.

தமிழ்த்தின விழாப்போட்டிக்குழுவின் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் பேசுகையில் "கோப்பாய் வட்டாரத்தில் 34 பாடசாலைகளிலிருந்து 600க்கு மேற்பட்ட மாணவர்கள் பதினேழு நிகழ்ச்சிகளில் மிகவும் உற்சாகமாகக் கலந்திருக்கிறார்கள். ஒவ்வொரு நிகழ்ச்சியில் பங்குபற்றியவர்களும் தம்மால் இயன்ற அளவுக்குத்திறம்படச் செய்துள்ளார்கள்" என்றார்.


கல்வியதிகாரி திரு. வே. சண்முகநாதன் சான்றுப்பத்திரங்களை வழங்கினார்.


சங்கீதத்திற்கு!



சோனி
T. R 627

ட்ரான்சிஸ்டர் ரேடியோ




நீங்கள் போகுமிடமெல்லாம சங்கிதம் கேட்கலாம்
விலை 185/- ரூபாயே.
மீடியம் வேவ பெட்டி தெளிவான ஒலி. இயக்குவதற்கு இலகுவானது.

சீடில்ஸ் (யாழ்) லிமிட்டெட்,
122, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

சீடில்ஸ் ஸ்தாபனத்தின் எல்லாக் கிளைகளிலும் கிடைக்கும்.



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு [illegible] 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org